# தாக்க மதிப்பீடுகள் பற்றிய அனுபவங்கள் : நாம் எத்துணை நல்லவை செய்கின்றோம் என்பதை நாமே தெரிந்து கொள்ள முடியுமா?

மேரி பீ. அன்டேர்சன்




1. அறிமுகம் 238

2. சமாதானச் செய்திட்டத்துக்கான உள்ளூர் ஆற்றுதிறன் 239

3. சமாதானச் செய்திட்டம் பற்றிய பட்டறிவுச் சிந்திப்பு 243

4. தாக்கங்கள் பற்றிய கணிப்பீடும் மதிப்பீடும் செய்வதில் LCPP அனுபவங்கள் 246

5. சமாதான செய்முறை தாக்க மதிப்பீட்டுடன் RPP அனுபவம் 249

6. LCPP -RPP பொதுமைகளும் வேறுபாடுகளும் 251

7. குறிப்புரைகள் 254

8. மேலதிக வாசிப்பு 254

# தாக்க மதிப்பீடுகள் பற்றிய அனுபவங்கள் : நாம் எத்துணை நல்லவை செய்கின்றோம் என்பதை நாமே தெரிந்து கொள்ள முடியுமா?

மேரி பீ. அன்டேர்சன்

## 1. அறிமுகம்

தற்போதைய மோதுகைகள் குறித்த கலந்துரையாடல்கள் அநேகமான சந்தர்ப்பங்களில் அவற்றின் சிக்கலான தன்மையை எடுத்துக்காட்டுவனவாக விளங்குகின்றன. இந்த மோதுகைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிவிலியன் மற்றும் இராணுவத்தைச்சேர்ந்த பலர் சம்பந்தப்பட்டவையாகவுள்ளன, அவை உள்ளக, குழுக்களுக்கிடையிலான வரலாறுகள் மற்றும் வெளிவாரி, சர்வதேச நலன்கள் குறித்தவையாகவுள்ளன. அவை மிகவும் உயர்வான, சிறப்பான ஊக்க ஆர்வங்களாலும், சுயநலமிக்க மற்றும் குறுகிய நோக்கங்களாலும் வழிநடத்தப்படுகின்றன. இந்த ஊக்க ஆர்வங்கள் பலவாகவும், போட்டியிடுபவையாகவும் உள்ளன. மேலும், இந்த சிக்கலான மனிதநேய அவசரநிலைகள் (CHE) அடிமட்ட மக்களின் துன்பத்தைக் குறிப்பதற்கான மனிதநேய முயற்சிகளிலிருந்து சண்டையை முடிவுக்கு கொண்டு வருவதற்கான உயர்மட்ட முயற்சிகள் வரை ஒரு வீச்சிலான சர்வதேச பதில் நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன.



ஆயினும், இத்தகைய பல படிகளைக்கொண்ட சிக்கலான சூழ்நிலைகளின் கீழ் உயிர் வாழ்வை மற்றும் /அல்லது சமாதானத்தை முன்னேற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைக் கையாளும் சர்வதேசமுகவர் நிலையங்கள் எவ்வாறு அவற்றின் தாக்கங்களைத் தீர்மானிக்கமுடியும்? தேடலும், கணிப்பீடும் குழுக்களுக்கிடையிலான மோதுகையைப் பாதிப்பதால் அவை தமது பணியின் சுவடுகளை ஆய்வு செய்வதும், விளைவுகளை மதிப்பீடு செய்வதும் எவ்வாறு?

மோதுகையைக் குறைப்பதற்கான மனிதநேய அல்லது அரசியல் முயற்சிகளின் சுவடுகளைத்தேடி கணிப்பீடு செய்வதில் உள்ள கஷ்டம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டதாகும். இதில் முதலாவது, முன்னேற்றத்தை கணிப்பீடுசெய்வதற்கான அளவுகோல்கள் அல்லது சுட்டிகள் சம்பந்தமான ஒன்றாகும்.மோதுகையைக் குறைப்பதில் ஏற்படும் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான பொருத்தமான வடிவங்களும், முறைகளும் எவை?

இரண்டாவது, பரிமாணம் விளைவுகளுக்கான காரணங்கள் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். ஒரு சிக்கலான சூழலில் பல்வேறு சம்பவங்கள் நிகழும்போது எந்த நடவடிக்கைகள் எந்த விளைவுகளுக்குக் காரணமாகவுள்ளன என்பதை ஒருவர் அறிந்துகொள்வது எவ்வாறு? ஆக்கபூர்வமான படிகளை அழிவைக்கொணரும் வன்செயல்கள் மூழ்கடித்தால், இதன் கருத்து முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதாகுமா? வன்செயல் குறைவடைந்தால், வன்செயலைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்ட முயற்சிகளே இதற்கான காரணமென்று நாம் நேர்மையாகக் கூறமுடியுமா அல்லது மாற்றத்துக்கு பொறுப்பான ஏனைய காரணிகள் உள்ளனவா?

பின்வரும் பக்கங்களில் மோதுகைச் சூழல் அல்லது மோதுகை சம்பந்தமாகப் பணியாற்றும் முகவர் நிலையங்களின் தாக்கங்கள் சம்பந்தமான இந்த வினாக்களை நாம் கையாளவுள்ளோம். பிரிவு II மற்றும் III இல் முகவர் நிலையங்கள் தாம் பணியாற்றும் சமூகங்களினுள் நிலவும் மோதுகையில் தாம் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்து மேலும் கூடுதலாக அறிந்துகொள்வதற்கு எடுக்கும் கூட்டுமுயற்சிகளை விபரித்து நாம் ஆரம்பிக்கவுள்ளோம். முதலாவதாக, சமாதானச் செய்திட்டத்துக்கான உள்ளூர் இயலுமைகள்

என்பது (LCPP) உயிர்களைக் காப்பாற்றுவதற்கும், துன்பங்களைப் போக்குவதற்கும் மற்றும் உள்ளூர் அபிவிருத்தியை ஆதரிப்பதற்குமான அவர்களின் முயற்சிகள் பணியாற்றும் பிரதேசங்களில் உள்ள குழுக்களுக்கிடையிலான மோதுகைகளோடு இடைத்தாக்கம் எவ்வாறு செய்கின்றன, அத்தோடு சில சந்தர்ப்பங்களில் அதை மேலும் வலுப்படுத்துகின்றன என்பதை அறிந்துகொள்ள முயலும் பல மனிதநேய மற்றும் அபிவிருத்தி உதவி முகவர் நிலையங்கள் சம்பந்தப்பட்டவையாகும். இரண்டாவது செய்திட்டம், சமாதான நடைமுறை குறித்துச் சிந்தித்தல் (RPP) என்பது மோதுகை சம்பந்தமாக பிரத்தியேகமாகப் பணியாற்றும் பல முகவர் நிலையங்கள் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். அதாவது, குழுக்களுக்கிடையில் மத்தியஸ்தம், மீளிணக்கம், சமாதானக் கல்வி, மோதுகை முகாமைத்துவம், மோதுகை மாற்றுநிலையாக்கம், மற்றும் மோதுகையின் அபாயங்களைக் குறைப்பதற்கான ஏனைய அணுகுமுறைகளில் ஈடுபடும் முகவர் நிலையங்களாகும். இப்பிரிவுகளில் நாம் இந்த இரண்டு கருத்திட்டங்களினதும் பின்னணி, அணுகுமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து விபரிக்கவுள்ளோம்.

பிரிவு IV இல் மோதுகையில் மனிதநேய மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தாக்கங்களை எவ்வாறு கணிப்பீடு செய்வது என்பது குறித்து LCPP ஊடாகக் கற்றுக்கொண்டவற்றை நாம் மீண்டும் மீளாய்வு செய்யவுள்ளோம். பிரிவு V இல் மோதுகையைக்குறைத்து, சமாதானத்தைக் கட்டியயெழுப்பும் முயற்சிகளின் விளைவுகளை எவ்வாறு கணிப்பீடு செய்வது என்பது சம்பந்தமான தேடல்முடிவுகளை நாம் வழங்குகின்றோம். இறுதியாக, பிரிவு VI இல் ஒருவர் மோதுகையினுள் பணியாற்றுகின்றாரா அல்லது மோதுகை குறித்துப் பணியாற்றுகின்றாரா என்பதைப் பொறுத்து அத்தியாவசியப்படும் கணிப்பீட்டு தொழிநுட்பங்களிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் குறித்துக் நாம் கலந்துரையாடுகின்றோம்.

## 2. சமாதான செய்திட்டத்துக்கான உள்ளூர் ஆற்றுதிறன்



பனிப்போர் முடிவடைந்து ஐந்து வருடங்களுக்குப்பின்னர், அநேகமான சந்தர்ப்பங்களில் பாரதூரமான வன்செயல் நிறைந்த குழுக்களுக்கிடையிலான மோதுகைகள் குமுறி எழுந்த பிரதேசங்களில் 1994 இல் பல சர்வதேச மனிதநேய மற்றும் அபிவிருத்தி உதவி அ.சா.நிறுவனங்கள் பணியாற்றின. இவற்றுட் பல தீவிரமான சிவிலியன் அடிப்படையிலான உள்நாட்டு யுத்தங்கள் நிறைந்த பிரதேசங்களாக மாற்றமடைந்தன. இந்த யுத்தங்கள் முன்னர் செயலளவில் இசைவுநெருக்கம் கொண்ட சமூகங்களாக விளங்கிய உபகுழுக்களிடையே இடம்பெற்றன.

உள்நாட்டினவும், வெளிநாட்டினவுமான பல அ.சா.நி மேலதிகாரிகள் தாம் வழங்கிய உதவி வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது சம்பந்தமான சான்றுகள் கிடைத்தமையால் மிகவும் கவலையடைந்தனர். அவர்கள் துன்பப்படும் சிவிலியன்களுக்கெனவும், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எந்தத் தரப்பினருக்கும் பக்கச் சார்பின்றியும் தாம் வழங்கிய உதவிகள், அநேக சந்தர்ப்பங்களில் உள்ளூர் யுத்த முன்னெடுப்பாளர்கள், ஆயுதக்குழுக்கள் அல்லது பக்கச்சார்புள்ள அரசியல்வாதிகளின் கைகளுக்குப் போய்ச்சேர்ந்ததை அறிந்திருந்தனர்.

சிலவேளைகளில் பொருட்கள் களவாடப்பட்டு இராணுவங்களுக்கு உணவு வழங்குவதற்கு அல்லது ஆயுதங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டன. சிலவேளைகளில் அதிகாரிகள் உதவி விநியோகங்களுக்கான இடங்களையும், நேரங்களையும் கட்டுப்படுத்துவதன்மூலம் யுத்த நோக்கங்களுக்காக ஜனத்தொகையினர் அங்குமிங்கும் இடம்பெயருவதைக் கட்டுப்படுத்தினர். அப்பிரதேசங்களில் மனிதநேய உதவிகளின் துஷ்பிரயோகங்கள் நீண்டகாலம் நிலைத்திருப்பவையாக காணப்பட்டன. சில உதவிப்பணியாளர்கள் உள்ளூரில் இடம்பெறும் குழுக்களுக்கிடையிலான யுத்தச்சூழமைவில் இது தவிர்க்கமுடியாததென்று எண்ணிய எதிர்மறையான தாக்கங்களைத் தவிர்க்கும் வழிவகைகள் குறித்துச் சிந்திக்கத்தொடங்கினர்.

இந்த நிலைமைகளில் சமாதானச் செய்திட்டத்துக்கான உள்ளூர் ஆற்றதிறன்கள் (LCPP) மோதுகை வலயங்களில் பணியாற்றும் செயலூக்கம் மிக்க பல அ.சா.நிறுவனங்களின் கூட்டுமுயற்சியாக ஒழுங்கமைக்கப்பட்டது. இச்செய்திட்டம் இந்த முகவர் நிலையங்களில் பரந்த பல்வேறுபட்ட அனுபவங்களை ஒன்றுதிரட்டி அவற்றை ஒப்புநோக்கி பகுப்பாய்வு செய்வதன்மூலம், வழங்கப்பட்ட உதவியானது மோதுகையை மோசமாக்கும் தாக்கங்கள் வருந்தத்தக்க தன்மையை கொண்டிருந்தனவெனினும் யுத்தத்தினுள் “வியாபாரம் செய்வது” என்பது தடுக்கமுடியாத அம்சமா அல்லது இத்தகைய எதிர்மறை விளைவுகளை மட்டுப்படுத்தும் அல்லது முற்றாக இல்லாது ஒழிக்கும் விருப்புத் தெரிவுகள் உள்ளனவா என்பதைத் தேடியறியும் ஒரு முயற்சியாகும்.

LCPP (மனிதநேய மற்றும் அபிவிருத்தித்துறை இரண்டிலும் பணியாற்றும்) சர்வதேச உதவி முகவர் நிலையங்கள் தமது உதவியானது மோதுகைகளினுள் சென்று அவற்றை மோசமாக்குவதை அல்லது நீடிப்பதைத்தடுக்கும் அதேவேளையில், அவை இலக்காகக் கொண்ட நன்மையைச் செய்வது எவ்வாறென்று சிந்திக்கத் தலைப்பட்டன? மேலும், எதிர்மறையான, மோதுகையை மோசமாக்கும் விளைவுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, எவ்வாறு இத்தகைய உதவி உள்ளூர் மக்கள் மோதுகையலிருந்து விடுபடும் வகையிலும், மோதுகைக்குக் காரணமான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு அவர்களுக்கு அவசியமான முறைமைகளைத் தாபிக்கத் தொடங்கும் வகையிலும் வழங்கப்படலாம்.

அடுத்து வந்த ஆண்டுகளில் டசின் கணக்கிலான அசாநிகள் மற்றும் ஏனைய உதவி முகவர் நிலையங்களைச்சேர்ந்த நூற்றுக்கணக்கான தனிநபர்களைப் LCPP பணியில் ஈடுபடுத்தியது. அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் மேலும் சிறந்த பெறுபேறுகளை எவ்வாறு உறுதிசெய்துகொள்ளலாம் என்பதை விளங்கிக்கொள்ளும் வகையில் அ.சா.நிறுவனங்களின் செய்திட்ட பணிகளை பரிசீலித்துப் பகுப்பாய்வுசெய்தனர். செய்திட்டத்தின் முதல் 18 மாத காலத்தில் 14 மோதுகை வலயங்களிலான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து 15 நேர்பு ஆய்வுகள் எழுதப்பட்டன.



அடுத்த வருடத்தில் 20துக்கும் மேற்பட்ட மீளுட்டல் செயலமர்வுகள் அ.சா.நி தலைமையகப் பதவியினருக்காக இடம்பெற்றன. இவற்றுள் அநேகமானவை மோதுகைப்பிரதேசங்களிலும், சில கொடைவழங்கிய நாடுகளிலும் நடத்தப்பட்டன. இச்செயலமர்வுகளில் பங்குபற்றியோர் நேர்பு ஆய்வுகளிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவைத் தமது சொந்த அனுபவங்களுடன் ஒப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் தாம் படித்தவை சம்பந்தமாக சேர்க்கவேண்டியவற்றைச் சேர்த்தும், மாற்றியும், திருத்தியமைத்தும், மேம்படுத்தியும் அவைகுறித்து மீண்டும் சிந்துக்குமாறும், முகவர் நிலையங்கள் பணியாற்றும் பல்வேறு மோதுகைப் பிரதேசங்களில் காணப்படும் யதார்த்தங்களுக்கேற்ற வகையில் அவற்றைப் பொருத்தமாக அமைக்குமாறும் அவர்கள் வேண்டப்பெற்றார்கள்.

இச்செயலமர்வுகளிலிருந்து பெற்றுக்கொண்ட கற்றலின் விளைவான திரண்ட அறிவு “தீங்கெதுவும் செய்யாதிருங்கள்” என்பது ஆகும். செய்யப்படும் உதவிகள் எவ்வாறு சமாதானத்துக்கு அல்லது யுத்தத்துக்கு ஆதரவளிக்கின்றன (அன்டேர்சன் 1999)” என்னும் நூலின் வெளியீட்டுக்கான அடிப்படையை வழங்கியது. அதன் பின்னர் LCPP தரும் உண்மையான பயன்பாடும் வினைத்திறனும் நிஜநிலையில் எந்த அளவிற்கு ஈடுபட்டுள்ளன என்பதற்கு, அரச சார்பற்ற நிறுவனங்கள் 12 மோதுகை மையங்களில் வேண்டிய ஆராய்ச்சியை மேற்கொண்டன. இந்த மேல் உத்தியோகத்தர்கள் தொடரும் உதவிச் செய்திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலின் “தீங்கெதுவும் செய்யாதிருங்கள்” என்ற அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பரிசோதனை செய்தனர். இதிலிருந்து அவர்கள் குழுக்களுக்கிடையிலான மோதுகைகளில் சர்வதேச உதவியின் தாக்கங்களை எவ்வாறு தேடி அறிவது என்பது குறித்து மேலும் கற்றுக் கொண்டனர். 2000 செப்டெம்பரில் LCPP யின் பணிகுறித்த இக்கட்டம் முடிவடைந்தபோது பெரும் எண்ணிக்கையிலான முகவர் நிலையங்கள் பிரதான நீரோட்டத்திற்குரிய முயற்சிகள் என்று தாம்

முன்னர் அழைத்த விடயத்தை ஆரம்பித்தனர். இதில் அவர்கள் தமது முகவர் நிலையங்களில் உள்ளவர்கள் ஒரேசீராகவும், ஒரே விதமான விளக்கத்துடனும் பணியாற்றுவதை உறுதிசெய்யும்விதத்தில் வெளிக்கள அடிப்படையிலான படிப்பினைகளை தமது தலைமையகத்துக்கு கொண்டுசென்றனர்.

LCPP ஊடாக கற்றுக்கொண்ட படிப்பினைகள் எவை? அவற்றில் மூன்று விடயங்கள் இங்கு கலந்துரையாடப்படும் தாக்கம் மற்றும் கணிப்பீட்டுப் பிரச்சினையோடு இயைபுற்றவையாகும்.

முதலாவதாக, பல சூழல்கள் மற்றும் பல வகையான உதவி நிகழ்ச்சித் திட்டங்களை நோக்கி LCPP மனிதநேய மற்றும் அபிவிருத்தி உதவிக்கும், மோதுகைக்குமிடையிலான இடைத்தாக்கங்கள் குறித்த தெளிவான மீண்டும் மீண்டும் நிகழும் பாங்குகளை இனங்காணுவது சாத்தியமாகியது. குறிப்பாக, உதவியின் மூலவளங்களை இடமாற்றம் செய்வதனூடாகவும் "உட்கிடையான நெறிசார் தகவல்கள்" ஊடாகவும் (அன்டேர்சன் 1999) எவ்வாறு உதவிகள் மோதுகையை மேலும் மோசமாக்கக்கூடும் என்பதை நாம் இப்பொழுது அறிந்துள்ளோம். பல உதவிப் பணியாளர்கள் பல்வேறுவகையான மோதுகைகளில், பல்வேறுவகைப்பட்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்களில் தமது சொந்த அனுபவங்கள் குறித்துச் சிந்திப்பதன்மூலம் இப்பாங்குகளை இனங்கண்டுள்ளனர் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். அவை எவ்வாறு விடயங்கள் இடம்பெறலாம் என்பதுகுறித்த எடுகோள்களைவிட மிகவும் காத்திரமான வெளிக்கள அடிப்படையிலான கற்றலை உட்பொருளாகக் கொண்டவையாகும்.

இரண்டாவதாக, மோதுகைச்சூழல்கள் குறித்த பரந்த பொதுப்பார்வை உதவியும், மோதுகையும் எவ்வாறு ஒன்றையொன்று தாக்குகின்றன என்பது குறித்த முக்கிய தாற்பரியங்களைக் கொண்ட மோதுகைகளின் சுபாவங்கள் குறித்த நுண்ணறிவுகளையும் வழங்கியுள்ளது. LCPP சகல மோதுகைகளிலும் இரண்டுவகையான சக்திகள் உள்ளனவென்பதைக் கண்டறிந்தது. ஒரு புறத்தில் மோதுகைப் பிரதேசங்களிலுள்ள மக்களிடையே உப குழு அடையாளங்களின் அடிப்படையில் பிரிவுகள் உள்ளன. மறுபுறத்தில் அதேவேளையில் மோதுகைகளினுள் சிக்கியுள்ள மக்களிடத்தே இப்பிரிவினைகள் இருந்தபோதிலும், ஒருவரோடொருவர் இணைந்தும் உள்ளனர். மக்கள் முன்னர் அயலவர்களாகவும், நண்பர்களாகவும் வாழ்ந்த நாடுகளுள் மோதுகைகள் எழும் போது இது பிரத்தியேகமான உண்மையாகவுள்ளது. இது எதியோப்பியா மற்றும் எரித்திரேயாவுக்கிடையில் நடப்பதுபோன்ற எல்லைகளுடான யுத்தநிலைகளிலும் உண்மையாக விளங்குகின்றது.

யுத்தங்கள் குழுக்களுக்கிடையிலான பிரிவினைகள் சம்பந்தமான பண்புகளைக் கொண்டவையென்பது பிரத்தியட்சமானதாகும். ஆயினும், உதவிவழங்குவோர் தமது உதவி எவ்வாறு மோதுகையைப் பாதிக்கின்றதென்பதை விளங்கிக்கொள்ளவேண்டுமாயின் இப்பிரிவினைகளின் அடிப்படைகளையும் பரிமாணங்களையும் அறிந்துகொள்வதும் அவசியமானதாகும். உதாரணமாக, உதவி வழங்கும் ஆளணியினர் எந்த உபகுழுக்கள் தமக்குள் மோதுகின்றன என்பதையும், அது ஏன் என்பதையும் விளங்கிக் கொள்வது அவசியமாகும். பதற்றங்கள் முறைமைசார் அடிப்படைக் காரணங்களிலிருந்து எழுகின்றனவா அல்லது சுயநலத்துக்காக நிலைமைகளைக் கையாளுதல், சந்தர்ப்பவாதம் அல்லது ஏனைய தொடர்புள்ள காரணங்களால் எழுகின்றனவா என்பதைத் தீர்மானிப்பதற்கு அவர்கள் பதற்றத்தின் மூலங்களை இனங்காணுவது அவசியமாகும். அவர்கள் எந்தப் பிரச்சினைகள், நடைமுறைகள், நிறுவனங்கள் அல்லது அனுபவங்கள் மக்களைப் பிரிக்கின்றன என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும். முரண்படும் உபகுழுக்களுக்கிடையிலான "பிரிவினைக் காரணிகள்" குறித்து இத்தகைய தெளிவு இல்லாவிடில் உதவிப் பணியாளர்கள் தமது உதவி மோதுகைகளைப் போஷித்து அவற்றை மேலும் மோசமாக்குகின்றதா (அல்லது) அவற்றைக் குறைக்க உதவுகின்றதா என்பதை அறியமுடியாதிருக்கும்.

இவ்வாறே, யுத்தம் நிலவியபோதிலும் மக்கள் எவ்வாறு ஒருவருக்கொருவர் இணைப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதை உதவிப் பணியாளர்கள் புரிந்து கொள்வது அவசியமாகும். LCPPN மோதுகையின்

வேறுபட்ட பக்கங்களில் இருந்த மக்களை இணைப்பதற்கு உதவிய பல்வகைப்பட்ட "இணைப்புக் காரணிகளைக்" கண்டறிந்துள்ளது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்கியது. (அகநிலை அமைவு அல்லது சந்தை முறைமைகளைப்போன்ற). பகிரப்படும் முறைமைகளும், நிறுவனங்களும், (யுத்தத்தினால் ஏற்படும் குழப்பநிலை காரணமாக குடும்பத்திலிருந்து பிரிந்து சென்ற சிறுவர்களை மறுதரப்பிலிருந்து "சுவீகாரம்" செய்யும் குடும்பங்களைப் போன்ற) மனப்பாங்குகளும், செயற்பாங்குகளும் (குடியேற்ற வாதத்தின் ஒரு பொதுவான வரலாறு அல்லது தற்போதைய யுத்தநிலை யதார்த்தம் போன்ற) கடந்தகால அல்லது நிகழ்கால பொதுவான அனுபவங்கள், பொதுவான ஒரு மதம் அல்லது சிறுவர்கள் சம்பந்தமான பெறுமானம் போன்ற) பகிரப்படும் பெறுமானங்களும், ஆர்வங்களும், (நினைவுச் சின்னங்கள் அல்லது தேசிய விடுமுறைகள் போன்ற) பகிரப்படும் சின்னங்களும், சந்தர்ப்பங்களும். மீண்டும் மக்களுக்கிடையிலான இந்த இணைப்புறவுகள்பற்றிய அறிவு இல்லையெனில் உதவிப் பணியாளர்கள் தமது பணி இணைப்புகளை உதாசீனம் செய்து அவற்றைக் மீள்வலியுறுத்தலுடையதாக அமைகின்றதா அல்லது அவற்றை ஆக்கபூர்வமாக அங்கீகரித்து வலுப்படுத்துகின்றனவா என்பதை அறிந்துகொள்ளமுடியாதிருப்பர்.

LCPP இல் சம்பந்தமுற்ற மக்கள் சர்வதேச உதவிக் குழுக்களுக்கிடையிலான பிரிவினையையும், பதற்றங்களையும் வலுப்படுத்தும் போது அது யுத்தத்தை மோசமாக்குகின்றது என்பதையும், குழுக்களுக்கிடையிலான இணைப்புகளை உள்ளிருந்து பலவீனப்படுத்தும் போதும் இதுவே நிகழ்கின்றதென்றும் கண்டறிந்துள்ளனர். சர்வதேச உதவிக் குழுக்களுக்கிடையிலான பிரிவினைகளைக் குறைத்து, இணைப்புகளுக்கு ஆதரவளித்து அவற்றை வலுப்படுத்தும்போது அது சமாதானத்தை முன்னேற்றுகின்றதென்பதையும் கண்டறிந்துள்ளனர்.



மூன்றாவதாக, LCPP மூலம் பெறப்பட்ட அனுபவம் ஓர் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் விபரங்களிலேயே அது பிரிவினைகளை அல்லது இணைப்புக் காரணிகளை வலுப்படுத்துவதன் மீது தாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதையும் காட்டுகின்றது. உதவி வழங்குவதா?, எங்கு பணியாற்றுவது?, எப்பொழுது?, எவ்வளவு காலத்துக்குப் பணியாற்றுவது?, யாரை உள்ளூரில் பணம் கொடுத்துப் பணிக்கமர்த்துவது?, எவரை இலக்குவைப்பது?, சர்வதேச மேல்உத்தியோகத்தர்களின் வகிபாகம் யாது, பொருட்களை எவ்வாறு வழங்குவது போன்ற நிகழ்ச்சித் திட்டத் தீர்மானங்களும் ஏனைய அடிப்படையான முகாமைத்துவத் தீர்மானங்களும் உதவி வழங்கப்படும் பிரதேசங்களில் குழுக்களுக்கிடையிலான உறவுகளில் தாக்கங்களைச் செலுத்துகின்றன.

LCPP யில் சம்பந்தமுற்ற மனிதநேய மற்றும் அபிவிருத்தி உதவிப் பணியாளர்கள் எதிர்நோக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் குழுக்களுக்கிடையிலான பிரிவினைகளை மோசமாக்குவதற்குப் பதிலாக,அவற்றைக் குறைப்பதற்கான உதவிகளை வழங்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிவது சாத்தியமாகியுள்ளது. தற்போதுள்ள இணைப்புறவுகளைக் உள்ளிருந்தே சிதைவுறுத்துவதற்குப் பதிலாக அவற்றை அங்கீகரித்து, மேலும் கட்டியெழுப்புவதற்கான விருப்புத் தெரிவுகளைக் கண்டறிவதும் சாத்தியமாகியுள்ளது. எதிர்மறைத்தன்மை கொண்ட ஒழுக்கநெறி பிரச்சினைகளை புறங்காண்பதற்காக உதவி வழங்கும் நிறுவனங்களின் பணியாளர்கள் சிலர் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

LCPP யின் சகல படிநிலைகளூடாகவும் - நேர்பு ஆய்வுகள், மீளூட்டற் பட்டறைகள், நிஜ செய்திட்டச் சூழல்களில் தீங்கெதுவும் செய்யாதீர்கள் எனும் அணுகுமுறைகளைப் பிரயோகித்தல் மற்றும் முகவராண்மைக் கட்டமைப்புகளிலும், வழிமுறைகளிலும் தீங்குசெய்வதைத் தவிர்ப்பதை ஒரு பிரதான நீரோட்டத்தில் ஈடுபடுத்தல் - மோதுகையின் மீதான உதவியின் தாக்கங்களைத் தேடியறிவது மற்றும் மதிப்பீடு செய்வது ஆகியவற்றிலேயே கவனம் செலுத்தப்பட்டுவந்துள்ளது.

## 3. சமாதானச் செய்திட்டம் பற்றிய பட்டறிவுச் சிந்திப்பு

LCPP யின் மாதிரியைப் பின்பற்றி 1999 செப்டம்பரில் மோதுகை குறித்துப் பணியாற்றும் பெரும் எண்ணிக்கையிலான சர்வதேச முகவர் நிலையங்கள் சமாதான நடைமுறை குறித்துச் சிந்திக்கும் செய்திட்டத்தில் (RPP) ஒன்றிணைந்தன. இந்த முயற்சியின் நோக்கம் அவர்கள் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகள் பயனுறுதிமிக்கவையென்றும், எவை பயனுறுதியற்றவையென்றும், எத்தகைய சூழ்நிலைகளில் அவர்களின் நடவடிக்கைகள் பயனளிக்கும் மற்றும் எத்தகைய சூழ்நிலைகளில் அவை பயனற்றவை என்பதை அறிந்து கொள்ளும் வகையில் கூட்டு மற்றும் ஒப்பீட்டு அனுபவங்களை ஆய்வு செய்வதாகும். அத்தோடு, பல்வேறு முகவர்நிலையங்கள் மோதுகைகளின் பல்வேறு படிநிலைகளில், பரந்துபட்ட புவியியல் பிரதேசங்களில் மேற்கொண்ட பல்வேறு சமாதான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான பல்தொகையான நேர்பு ஆய்வுகள் மூலம் பரந்த வீச்சிலான அனுபவங்கள் திரட்டப்பட்டன. இருபத்தாறு நேர்பு ஆய்வுகள் பூரணப்படுத்தப்பட்டு, இந்த விடய நிகழ்வுகளைப் படிப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும், பகுப்பாய்வுசெய்வதற்குமான கலந்தாலோசிப்பதனூடாக, மோதுகை வலயங்களுக்கு உள்ளும், வெளியிலும் பணியாற்றும் சமாதான செயற்பாட்டாளர்களை ஈடுபடுத்தி, சமாதானப் பணியின் பயனுறுதி அல்லது பயனுறுதியின்மை குறித்த, சகல சூழ்நிலைகளுக்கும் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாக பதினொரு பிரச்சினைகள் இனங்காணப்பட்டன.

அடுத்துவந்த மாதங்களில் உலகின் பல்வேறு பிராந்தியங்களையும் (பல மோதுகைப் பிரதேசங்களும் உள்ளடங்கலாக) சேர்ந்த சமாதான செயற்பாட்டாளர்களை ஈடுபடுத்தி இப்பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கும், அவைகுறித்து அனுபவங்கள் வழங்கும் படிப்பினைகளைக் கற்றுக்கொள்வதற்குமென தொடரான மீளூட்டல் பட்டறைகள் இடம்பெற்றன. இத்தகைய பட்டறைகள் மேலும் மேலும் இடம்பெற்றபோது இக்கலந்துரையாடல்களில் பயனுறுதி குறித்து, மேலும் அதிகமான கவனம் செலுத்தப்பட்டது.



**பிரதான வினாக்கள் பின்வருமாறு:**

அ) பயனுறுதியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக சமாதான முகவர் நிலையமொன்றுக்கு அவசியமான மோதுகை குறித்த அறிவு.

ஆ) எங்கே, எப்பொழுது, எத்தகைய பணிகள் பயனுறுதியானவை என்பது குறித்த அறிவு

இ) சமாதானப் பணியென்னும் சிக்கலான அரங்கில் பயனுறுதியை மதிப்பீடு செய்யும் வழிகள்.

பயனுறுதியைத் தேடி அறியவும், கணிப்பீடு செய்யவும் உதவியாக இருந்த தெளிவான படிப்பினைகள் பரிணமித்தமை இக்கருத்திட்டத்தில் சம்பந்தமுற்ற அனைவருக்கும் அத்துடன் சமாதான நடைமுறையென்னும் சிக்கல்வாய்ந்த உலகில் அன்றாடம் பணியாற்றுவோருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். இவையனைத்தும் "*யுத்தத்தை எதிர்நோக்குதல் : சமாதானச் செயற்பாட்டாளர்களுக்கான தீர்மானகரமான படிப்பினைகள்* (அன்டோர்சன் மற்றும் ஒஸ்லோன் 2003) என்னும் வெளியீட்டில் திரட்டி வழங்கப்பட்டுள்ளன. உலகின் குறிப்பிட்ட பிரதேசங்களில் பணியாற்றும் சமாதான முகவர் நிலையக்குழுக்கள் ஓரிரண்டு வருட காலப்பகுதியில் RPP யின் பாடங்களைக் கற்று, தொடரும் நிகழ்ச்சித்திட்ட முயற்சிகளில் அவற்றைப் பிரயோகித்து அவற்றின் பயனுறுதியையும் தாக்கங்களையும் பரீட்சிக்கும் அதேவேளையில் RPP தொடர்ந்து முன்செல்லும்.

இங்கு தாக்கத்தை கணிப்பீடு செய்வதில் எமது கவனத்தைச் செலுத்தும் நோக்கத்துக்காக RPP ஊடாகக் கற்றுக் கொண்ட மூன்று பாடங்கள் இயைபுள்ளவையாகும்.

முதலாவதாக, பயனுறுதியுள்ள பணிக்கு மோதுகையின் சூழமைவு குறித்த பூரணமான அறிவு இன்றியமையாததென்பதை ஒரு பரந்த வீச்சிலான சமாதான செயற்பாட்டாளர்கள் ஏற்றுக்

கொள்ளுகின்றனர். ஆயினும், எவ்வளவு அறிவு போதுமானதென்பது சம்பந்தமாகவும், எந்த அறிவு மிகவும் முக்கியமானது என்பது குறித்தும், அறிவு எவ்வாறு பயனுள்ள பகுப்பாய்வாக மாறுகின்றது என்பது குறித்தும் இன்னமும் உடன்பாடு இல்லாத நிலையே காணப்படுகின்றது. எப்படியாயினும், RPP அனுபவத்தின் சான்றுகள் சூழமைவுப்பகுப்பாய்வின் நான்கு பிரதான அம்சங்களைச் சுட்டிக்காட்டியுள்ளன. இவற்றை விளங்கிக்கொள்ளாவிடில், பயனுறுதியின் சாத்தியப்பாடு பாரதூரமாகப் பாதிக்கப்படும். சூழமைவுப் பகுப்பாய்வின் இந்த நான்கு அம்சங்கள் பின்வருமாறு:

1. எதை அல்லது யாரைத் தடுத்துநிறுத்துதல் வேண்டும்? சமாதானங்குறித்த துடிப்பான செயற்பாட்டாளர்கள் பலர் தாம் பலமான மாற்றுவழியொன்றைக் கட்டியெழுப்பினால் மோதுகை முடிவுக்கு வந்துவிடுமென்பதை நம்புவதால், வன்செயல் அல்லது மோதுகைக்கான ஆக்கபூர்வமான மாற்றுவழிகளைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்றனர். ஆயினும், அனேகமான மோதுகைகள் மோதுகையிலிருந்து அரசியல் ரீதியில் அல்லது பொருளாதார ரீதியில் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வோரின் நலன்களாலேயே இயக்குவிக்கப்படுகின்றனவென்பதை அனுபவம் காட்டி நிற்கின்றது. இவற்றை விளங்கிக்கொண்டு, பகுப்பாய்வுசெய்து, இந்த நலன்களைக் கையாளுவதற்கான நிகழ்ச்சித் திட்ட முறையிலான அணுகுமுறை இல்லையெனில், குழப்புவோரின் செயல்களால் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சிகள் தொடர்ச்சியாகக் குழப்பியடிக்கப்படும்.

2. எதை மற்றும் யாரை ஆதரித்தல் வேண்டும்? அநேகமான சந்தர்ப்பங்களில் சமாதானச் செயற்பாட்டாளர்கள் மக்கள் சண்டையிடாத மற்றும் கருத்து வேறுபாடுகளைவிட உடன்பாடுகள் அதிகமாகவுள்ள பிரதேசங்களை முதலில் இனங்கண்டு, பகுப்பாய்வு செய்யாமல் சமாதான நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்கின்றனர். இந்த அறிவு இல்லாதவிடத்து, சமாதான நிகழ்ச்சித் திட்டங்கள் தற்போதுள்ள சமாதானத்துக்கான வழிமுறையமைப்புகளுக்கு ஆதரவு வழங்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிடுகின்றன.



3. மோதுகையின் வெளிவாரி மற்றும் உள்ளகக் காரணிகள் எவை? அநேகமான யுத்தங்கள் சர்வதேச மற்றும் / அல்லது சர்வபிராந்திய மற்றும் உள்ளூர்ப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. பயனுறுதியை உறுதிசெய்துகொள்வதற்கு, சமாதான நடைமுறை உத்திகள் உண்மையான சண்டை நிகழும் பிரதேசத்துக்கு வெளியிலுள்ளவையும், வன்செயலில் செல்வாக்குச் செலுத்தி அதை நீடிப்பவையுமான காரணிகளைக் கவனத்தில்கொள்ளுதல்வேண்டும்.

4. உத்தேச நடவடிக்கை முன்பும் எடுக்கப்பட்டதா? அப்படியாயின் அதன் விளைவுகள் எவை? அநேகமான சந்தர்ப்பங்களில் ஏனைய சமாதானச் செயற்பாட்டாளர்கள் முயன்று, எவ்வித பலனையும் பெறாத நிகழ்ச்சித்திட்டங்களில் தாமும் மீண்டும் ஈடுபடுகின்றனர். உதாரணமாக, பலர் அதிகம் இடம்பெறுவது மேலும் சிறந்ததென்று உட்கிடையாக அனுமானித்து, சொல்லாடல்களை ஒழுங்குசெய்கின்றனர். ஆயினும், சூழ்நிலைப் பகுப்பாய்வு இது உண்மையென்று நிரூபிக்காத வரையில், அல்லது ஏனையவை தோல்வியுற்ற இடத்தில் ஒரு குறிப்பிட்ட சொல்லாடல் வெற்றியடையுமென்று நிரூபிக்காத வரையில் மக்கள் தமது சக்தியை வீண்விரயம் செய்பவர்களாகவேயிருப்பர்.

இரண்டாவதாக, சமாதானச் செயற்பாட்டாளர்கள் தமது பிரதானமான இரு நீண்டகால இலட்சியங்களில் வன்செயல் மோதுகையை முடிவுக்கு கொண்டுவருவது மற்றும் நீதியான, நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவது என்பவற்றில் உடன்பாடு கண்டிருப்பதுபோலத் தோன்றுகின்றது. சில முகவர் நிலையங்கள் இந்த இலட்சியங்களுள் ஒன்றில் கவனஞ்செலுத்துகின்றன, ஏனையவை சமகாலத்தில் இரண்டிலுமே கவனஞ் செலுத்துகின்றன. ஆயினும், சில சமாதான நடைமுறைகள் வெளிப்படையாகவே வன்செயலைக் குறைப்பதை நோக்கி நெறிப்படுத்தப்பட்டபோதிலும், (உதாரணமாக இடைப்பட்ட நிலையை எடுத்தல் மற்றும் உடனிணைத்துச் செல்லும் முயற்சிகள்) நீதியானதும், பேண்தகு சமாதானத்தின் அடைவிலக்கானது செய்திட்ட தெரிவுகளோடு சம்பந்நதப்படுவதிலும் பார்க்க செய்திட்ட நடவடிக்கைகளுடன்

இணைப்புற்றது என்பது தெரியவருகிறது. பலர் சமாதானத்துக்காக பல விடயங்களைச் செய்கின்றனர். அவர்கள் என்றாவது ஒரு நாள் அனைத்தும் சரியாகுமென்று அனுமானிக்கின்றனர். நல்ல செயற்பாடுகள் பல தாமாகவே சமாதானத்தைக் கொண்டுவருவதில்லை.

மூன்றாவதாக, RPP யில் பங்கேற்போர் சமாதானத்துக்காக மேற்கொள்ளப்படுபவையும், விடய ஆய்வுகளில் தரப்பட்டுள்ளவையுமான செயற்பாடுகளின் வீச்சைக்கண்டு ஆரம்பத்தில் அதிர்ச்சியடைந்த போதிலும், காலப்போக்கில் சகல சமாதான நடைமுறைகளையும் ஓர் எளிமையான விளக்கவரைபடத்தில் காண்பிக்கலாமென்பது தெளிவாகியது. (கீழே உரு. 1ஐப் பார்க்கவும்) இந்த வார்ப்புரு சமாதானம் குறித்த உபாயங்களில் பலர் சம்பந்தமுறுவதாலேயே சமாதானத்தைக் கட்டியெழுப்பலாமென்பதை நம்புவதிலிருந்து, முக்கிய பதவிகளிலுள்ளோர் சம்பந்த முறுவதாலேயே அது சாத்தியமாகுமென்று எண்ணுவது வரையில் ஒரு வீச்சாகவுள்ளனவென்பதைக் காட்டுகின்றது. இந்த வீச்சு கூடுதலான ஆட்கள் மற்றும் முக்கியமான ஆட்கள் என்னும் தலைப்பிடப்பட்ட பந்திகளின்கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மேலும், சமாதான நிகழ்ச்சித் திட்டவியலாளர்கள் இரு அடிப்படை மட்டங்களில் பணியாற்றுகின்றனர். சிலர் (உளப்பாங்குகளை மாற்றுவதில் கவனஞ்செலுத்தும் அல்லது சமாதான பெறுமானங்களைப் போதிக்கும் விடயங்கள் போன்ற) தனிநபர் மாற்றங்களில் கவனஞ் செலுத்துகின்றனர். ஏனையோர் சமூக-அரசியல் மாற்றங்களில் கவனஞ் செலுத்துகின்றனர்(நீதி நிறுவனங்கள், அரசியல்ரீதியில் அனைவரையும் உள்ளடக்குதல் என்பவற்றைச் சீர்திருத்தம் செய்தல் அல்லது அபிவிருத்தி செய்தல் என்பவற்றை நோக்கித் திசைமாற்கப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை). இவை வார்ப்புருவில் தனிநபர் மட்டம் மற்றும் சமூக அரசியல் மட்டம் எனப் பெயரிடப்பட்ட வரிசைகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

உரு . 1






பல்வேறு உத்திகள் மற்றும் பணியின் பல்வேறு மட்டங்களைக் கண்பிக்கும் இந்த எளிமையான விளக்க வரைபடம் RPP யில் சம்பந்தமுற்றோர் எத்தகைய சூழ்நிலைகளில் எத்தகைய பணிகள் பயனுறுதி வாய்ந்தவை மற்றும் எவை பயனற்றவை என்பதைத் தேடியறிந்துகொள்ள உதவியது. இங்கு உண்மையில் குறிப்பிடத்தக்க தேடல் முடிவுகள் சாத்தியமாயின.

சமூக-அரசியல் மட்டத்தில் நிறுவனரீதியான தாக்கங்களை ஏற்படுத்தாத தனிநபர் மட்டத்திலான பணிகள், சமாதானத்தில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்துவதில்லையென்பதை RPP கண்டறிந்தமை ஒரு சிறந்த, பயனுள்ள பணியாக இருக்கலாம் (பங்கேற்போர் தனிப்பட்டரீதியில் அனுகூலங்களைப் பெறக்கூடும்). ஆயினும், மோதுகையைக் குறைப்பதிலோ, அல்லது பேண்தகு சமாதானத்துக்குப்

பங்களிப்பு வழங்குவதிலோ அதன் பயனுறுதியைக் காணுதல் அரிதாகும். மக்கள் பொதுத்துறையில் தமது நடத்தைகளை மாற்றிக் கொள்ளாத வரையில் அவர்களின் உளப்பாங்கிலான மாற்றங்கள் சமாதானத்தில் எந்தவிதமான விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. இத்தகைய பணி சமூக, அரசியல் மட்டத்திலான பணியுடனும் இணைப்புகளைக் கொண்டிருக்கையில் மாத்திரமே பயனுறுதியுள்ளதாகின்றது.

மேலும் RPP அதிகமான ஆட்களில் கவனம் செலுத்தும் பணி மாத்திரம், தன்னளவில், மோதுகையை முடிவுறுத்தவோ, சமாதானத்தைக் கட்டியெழுப்பவோ போதுமான ஊக்கவிசையை ஏற்படுத்தப் போவதில்லை; அவ்வாறே முக்கியமான ஆட்களில் மாத்திரம் கவனம் செலுத்தும் பணியும் தன்னளவில் மோதுகையை முடிவுறுத்தி, நிலையான சமாதானத்தை ஏற்படுத்திவிடப்போவதில்லை; பயனுறுதி கிட்டவேண்டுமாயின், சமாதான நடைமுறையில் கூடுதலான ஆட்களை ஈடுபடுத்தும் முயற்சிகள் முக்கியமான ஆட்களை ஈடுபடுத்தும் முயற்சியுடன் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதை கண்டறிந்துள்ளது. மறுதிசையிலும் இந்த இணைப்புறவு ஏற்படுதல் வேண்டும். மக்கள் தயார்நிலையில் இல்லாதவேளையில் தலைவர்கள் உடன்படிக்கைகளைச் செய்தால் அவை நிலைக்கமாட்டா. மக்களுள் பலர் சமாதானத்தை விரும்பிய போதிலும், அவர்கள் தமது தலைவர்களின் தீர்மானங்களையோ, போரைத் தொடரவிரும்புவோரின் தீர்மானங்களையோ மாற்ற முடியாத நிலையிலிருக்கும் வரையில் சமாதானம் ஏற்படமாட்டாது.

தனிநபர் மட்டத்திலான பணி சமூக அரசியல் அபிவிருத்திகளுடன் இணைப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் மற்றும் கூடுதலான ஆட்கள் குறித்த உத்திகள் முக்கியமான ஆட்கள் குறித்த உத்திகளோடு இணைப்புற வேண்டும் என்பதை இவ்விரண்டு தேடல் முடிவுகளும் உரு.1 இல் வார்ப்புருவின் அடிப்பக்கத்தை நோக்கியும், குறுக்காகவும் செல்லும் அம்புகள் காட்டுகின்றன.



# 4. தாக்கங்கள் பற்றிய கணிப்பீடும் மதிப்பீடும் செய்வதில் LCP அனுபவங்கள்

### 1. உதவி முகவர் நிலையங்கள் கண்டுணரக்ககூடிய விளைவுகளுக்காகப் பணியாற்றுகின்றன.

நீண்ட காலமாகவே உதவி முகவர் நிலையங்கள் தமது பணியில் நேரடித் தாக்கங்களை மதிப்பீடு செய்வதில் மிகவும் திறன் படைத்தவர்களாக மாறியுள்ளனர். உதவியின் பின்னர் எத்தனைபேருக்கு உணவளிக்கப்பட்டுள்ளது, எத்தனை வீடுகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன, எத்தனை சிறுவர்களுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது போன்ற விடயங்களை ஒழுங்குமுறையாக ஆவணப்படுத்துகின்றனர். பலர் இதற்கு அப்பாலும் சென்று மேம்பாடுற்ற தண்ணீர் மற்றும் சுகநலமுறைமைகள் காரணமாக நோய்கள் குறைவடைந்துள்ளமை போன்ற தமது பணியின் மறைமுகத் தாக்கங்களையும் துல்லியமாக அறிக்கையிடுகின்றனர். அநேகமான உதவி முகவர்நிலையங்கள் பயனாளிகளுக்கு அனுகூலங்கள் கிட்டவேண்டுமென்பதற்காக வழங்கப்படும் மூலவள உதவியின் தாக்கங்களைத் தேடியறியும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளுகின்றன.

ஆயினும் LCPP யின் கரிசனை உதவியின் நேரடித்தாக்கங்களன்றி, உதவி மோதுகையில் ஏற்படுத்தும் பக்கவிளைவுகள் குறித்ததாகும். இதனால் உதவி முகவர் நிலையங்கள் கணக்குக்காட்டல் குறித்த தமது விளக்கத்தைக் கணிசமான அளவு மாற்றவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்கள் தமது பணியில் ஏற்படும் எதிர்பாராத, திட்டமிடப்படாத சமூக அரசியல் தாக்கங்களுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இது அவர்கள் துறைத்திறன் பெற்றிராத விடயப்பரப்புகளில் தம்மைச் சம்பந்தப்படுத்துவதென்று கவலையுற வைத்தது. இங்கு அவர்கள் அளவிட முடியாத பெறுபேறுகளை அளவீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

### 2. பாங்குகளைச் செல்லுபடியான சான்றுகளாக நோக்குதல்

LCPP செய்முறை உதவி மோதுகையுடன் எவ்வாறு இடைத்தாக்கம் புரிகின்றது என்பது சம்பந்தமான தெளிவான, மீண்டும் மீண்டும் நிகழ்கின்ற, நிலையான பாங்குகளை இனங்காண முடிந்ததால் இக்கவலைகள் குறைவடைந்தன. பல்தரப்பட்ட சூழல்களில் கிடைத்த குறித்த அனுபவங்கள் உள்ளன. (உதாரணமாக) இராணுவப்படையினருக்கு ஆதரவு வழங்குவதற்கு, அல்லது மக்கள் தொகையினர் இடம் பெயர்வுக்கு உணவு உதவியைப் பயன்படுத்துதல் போன்றவை போஷாக்குநிலையில் உணவு உதவியின் தாக்கத்தைப் போன்றே அதேயளவு முக்கியத்துவத்தைப் பெற்றன. இத்திரண்ட அனுபவத்தின் குறித்துரைப்பான தன்மையும், துல்லியமும் உதவிப் பணியாளர்கள் துல்லியமானவையும், செல்லுபடியானவையுமென்று எண்ணிய சான்றுகளை வழங்கின.

### 3. எதிர்மறையான மற்றும் உடன்பாட்டு தன்மைகொண்ட தாக்கங்களை கணிப்பீடுசெய்வதிலுள்ள வேறுபாடுகள்

LCPP மோதுகையின்மீதான உதவியின் உடனபாட்டு தன்மை கொண்ட தாக்கங்களைச் சரியாக அறிந்து கொள்வதை விட, எதிர்மறையான தாக்கங்களை இல்லாதொழிப்பதுகுறித்துத் தேடியறிவது இலகுவானது. அ.சா.நிறுவனங்கள் தமது உதவி மோதுகையை அதிகரிக்கச் செய்கின்றதென்பதை யாதெனும் ஒரு வழியில் இனங்கண்டால் அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். குறித்த ஒரு பிரச்சினையை இனங்காணுவது அப்பிரச்சினை எப்பொழுது தீர்க்கப்படுகின்றது என்பதை அறிந்துகொள்வதைச் சாத்தியமாக்குகின்றது.

உதாரணமாக, மேற்கு ஆபிரிக்க நாடொன்றில் பணியாற்றும் ஒரு முகவர் நிலையம், பூரணமாக உணர்ந்து கொள்ளாத நிலையில் தனது உள்ளூர் உத்தியோகத்தர்கள் அனைவரையும் மோதுகைப் பிரதேசத்திலுள்ள இனக்குழும குழு ஒன்றிலிருந்து மாத்திரமே பணிக்கு அமர்த்தியிருந்ததைக் கண்டறிந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட ஒரு பக்கச்சார்புள்ள நிகழ்ச்சித்திட்டம் அந்த இனத்துவக் குழுவினரைச் சேர்ந்த கிராமங்களுக்கும், தனிநபர்களுக்கும் பக்கச்சார்பாக அமைந்ததோடு, குழுக்களுக்கிடையே பதற்றங்களையும் அதிகரித்தது. முகவர் நிலையப் பதவியினர் ஓர் இனத்துவப் பிரச்சினையை இனங்கண்டு, தமது பணிக்கமர்த்தும் நடவடிக்கை முறைகள் எவ்வாறு இந்த விளைவுக்கு இட்டுச் சென்றன என்பதைப் பகுப்பாய்வு செய்ததும், அவர்கள் தமது ஆட்சேர்ப்பை ஏனைய குழுக்களுக்கும் விஸ்தரிக்க முடிந்ததோடு, குழுக்களுக்கிடையான பதற்றங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக குழுக்களுக்கிடையிலான இணைப்புறவுகளை வலுப்படுத்துவதும் சாத்தியமாயிற்று. இன்னுமொரு பிரதேசத்திலுள்ள ஓர் உதவி முகவர் நிலையம் தனது பொருட்களை விநியோகம் செய்யும் ட்ரக் வண்டிகளைப் பேணிப் பராமரிப்பதற்கான தொழில் நுட்பவியலாளர்களைப் பயிற்றுவித்த ஒவ்வொரு தடவையும், இந்த நபர்களை உளளூர் ஆயுதக் குழுக்கள் யுத்த முனையில் உள்ள தமது இராணுவ வாகனங்களைப் பேணுவதற்காக பலாத்காரமாக வேலைக்கு சேர்த்துக் கொண்டதைக் கண்டறிந்தது. தமது பயிற்சி எவ்வாறு இராணுவத்துக்கு ஆதரவு வழங்குகின்றதென்பதை இந்த முகவர் நிலையம் கண்டு கொண்டதுடன், அது பெண்களை தொழில்நுட்பவியலாளர்களாக சேர்த்துக் கொள்ளவும், பயிற்றுவிக்கவும் தீர்மானித்தது. பெண்கள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படாதவர்களாவர்.

இந்த இரண்டு உதாரணங்களும் எவ்வாறு பிரச்சினைகளின் தனித்துவ தன்மை -அந்த பிரச்சினைகளின் தீர்வை தனித்துவமான முறையில் கண்டறிய வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகின்றன. அவை ஒரு நிறுவனத்துக்கான ஆட்சேர்ப்பாக இருக்கலாம், ஒரு நாட்டின் முழு பிராந்தியத்திலும் இடம்பெறும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வேண்டிய பல நூற்றுக்கணக்கான உத்தியோகத்தாகளை பணிக்கமர்த்துவதாகவோ அல்லது ஒரு சில தொழில்நுட்பவியலாளர்களைப் பணிக்கமர்த்துவதாக இருக்கலாம். எதுவாயினும் பிரச்சினைகளின் தீர்வை தனித்துவமான முறையில் கண்டறிய வேண்டுமென்பதை

எடுத்துக்காட்டுகின்றன. நாங்கள் எவ்வாறு மோதுகையை மேலும் மோசமாக்குகின்றோம் என்று துல்லியமாக அறிந்து கொண்டால் நாம் அவற்றை தீர்ப்பதற்கான மாற்றுவழிகளைக் கண்டறிந்து அவற்றிற்கு பொருத்தமான தீர்வினை கண்டறிந்து கொள்ளலாம்.

### 4. பிரிநிலை காரணிகளையும், இணைக்கும் காரணிகளையும் சுட்டிகளாகப் பயன்படுத்துதல்.

பிரிநிலை காரணிகளையும் மற்றும் இணைக்கும் காரணிகளையும் மோதுகையின் உதவிகளினது தாக்கங்கள் சம்பந்தமான குறித்த சுட்டிகளாக அமைவதை LCPP கண்டறிந்தது. மோதுகையைப் பிரிநிலை காரணிகள் மற்றும் இணைக்கும் காரணிகள் என்றவகையில் விளங்கிக்கொள்ளும் அனுகூலம் இவை குழுக்களுக்கிடையிலான உறவுகளின் அவதானிக்கத்தக்க அம்சங்களை உள்ளடக்குகின்றன என்பதாகும்.

உதவி வழங்கும் குழுக்களுக்கிடையிலான பிரிவினைகளை இனங்கண்டு, பகுப்பாய்வு செய்ததும் இவை மோசமடைகின்றனவா அல்லது குறைவடைகின்றனவா என்பதை அவதானிக்க முடியும். உதாரணமாக, வீட்டுவசதிகளைப் பெற்றுக்கொள்வதில் சமத்துவமின்மை குழுக்களிடையே பிளவுகளுக்கு இட்டுச் சென்றிருந்தால் வீடுகளைப் பெறுவது பற்றிய மாற்றங்களை (கூடுதலானவர்களுக்கு வீட்டுவசதிகள் கிடைக்கச் செய்தல் அல்லது மட்டுப்பாடுகளை வலுப்படுத்தல்) மதிப்பீடு செய்யலாம். மேலும் மக்கள் குழுக்களுக்கிடையிலான பதற்றம் கூடிக் குறைவதனை மக்களின் நடத்தைகளில் அவதானிக்கலாம். தெருக்கள் பாதுகாப்பானவை என்று கருதப்பட்டு பயன்படுத்தப்படுகின்றனவா அல்லது ஆபத்தானவை என்றும், தவிர்க்கப்படவேண்டியவை என்றும் எண்ணப்படுகின்றனவா? மக்கள் எல்லைகளினூடாக சுதந்திரமாகப் பிரயாணம் செய்கின்றனரா அல்லது தங்களது குழுமங்குளுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளனரா?



இவ்வாறே உதவி வழங்கும் முகவர் நிலையங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை இணைக்கும் காரணிகளை இனங்கண்டு, பகுப்பாய்வுசெய்ததும் மக்கள் இவற்றின் பயன்பாடுகளை அதிகரிக்க செய்கின்றனரா அல்லது குறைக்கின்றனரா என்பதையும் பகுப்பாய்வு செய்தனர். உதாரணமாக, வர்த்தகம் ஓர் இணைக்கும் காரணியாக இருந்தால் மக்கள் இன்னமும் அல்லது மீண்டும் சந்தைகளில் சந்திக்கின்றனரா அல்லது சந்தைகளைத் தவிர்க்கின்றனரா? அவர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒன்றாக அனுப்புகின்றனரா, புதிதாக தனித்தனியாகப் பாடசாலைகளை அமைக்கின்றனரா? அல்லது அவர்களை வீடுகளில் வைத்துக்கொண்டிருக்கின்றனரா? பிரிநிலை காரணிகளும், இணைக்கும் காரணிகளும் குழுக்களுக்கிடையிலான உறவுகளைப் பிரதிபலிக்கும் உடனடியான, அவதானிக்கத்தக்க வாழ்வின் அம்சங்களுக்கான குவிமையப்புள்ளியை வழங்குகின்றன.

### 5. அசைவியக்க பண்பு கொண்ட கணிப்பீடு

மோதுகைகள் அசைவியக்கத்திறன் இயல்பு கொண்டவை என்பன காரணமாக அவைபற்றிய தாக்க கணிப்பீடும் அசைவியக்கத்திறனுடையதாக அமையவேண்டும் என்பது LCPP யினூடாகத் தெளிவாகியது. ஒரு காலப்பகுதியில் உடன்பாட்டு தன்மையான ஒரு தாக்கம் வேறு சூழ்நிலைகளின்கீழ் எதிர்மறையான பண்புகளை தன்னகத்தே கொண்டிருக்கக்கூடும். உதவி வழங்கும் முகவர் நிலையங்கள் பிரிநிலைப்படுத்தும் மற்றும் இணைக்கும் காரணிகளை அவற்றின் தாக்கம் மோதுகையைக் குறைப்பதை உறுதிசெய்யும் வகையில் பகுப்பாய்வுசெய்ய முனையும் போது அவை தமது பகுப்பாய்வை மீண்டும் மீண்டும் செய்வது அவசியமாகும். குழுக்களிடையிலான மோதுகையின் மாறுபடும் இந்த சூழமைவுகளில் ஒரு காலப்பகுதியில் ஒரு பிரிநிலைப்படுத்தும் காரணி இன்னொரு காலப்பகுதியில் ஓர் இணைக்கும் காரணியாக மாறலாம் (உதாரணமாக யுத்தம் மக்களைப் பிரிக்கின்றது. ஆயினும் சில சூழ்நிலைகளில் யுத்தம் குறித்த அனுபவம் உண்மையில் சிவிலியன் குழுக்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துகின்றது). இவ்வாறே இணைக்கும் காரணி பிரிநிலைப்படுத்தும் காரணியாகவும் மாறலாம்.

**6. இயல்பாக்க நடைமுறை**

சில விடய நிகழ்வுகளில் ஓர் உதவி நிகழ்ச்சித்திட்டம் ஒரு குறித்த விளைவை ஏற்படுத்தியதென்பதை மிகத் தெளிவாக கண்டறிந்து கொள்ளலாம். உத்தியோகத்தர்களைப் பணிக்கு அமர்த்துவது சம்பந்தமான எமது கதைகள் இத்தகைய விடய நிகழ்வுகளை எடுத்துவிளக்குகின்றன. ஆயினும், அநேகமான சூழ்நிலைகளில் பல விடயங்கள் நிகழ்வதால் ஒரு நிகழ்ச்சித்திட்ட முயற்சிகள் எவ்வாறு பரந்த அளவிலான விளைவுகளைப் பாதிக்கின்றன என்பது குறித்து நிச்சயமாகக்கூறுவது கடினமாகும்.

எப்படியாயினும், மக்கள் மோதுகைச் சூழ்நிலைகளில் அநேக சந்தர்ப்பங்களில் விளைவுகளுக்கு குறித்த நடவடிக்கைகளே காரணம் என்று கருதுவது LCPP யின் பணியில் தெளிவாகியது. உதவி வழங்கும் முகவர் நிலையமொன்றின் நிகழ்ச்சிதிட்டங்கள் சந்தேகம் மற்றும் போட்டி போன்றவற்றை மேலும் அதிகரிக்கின்றனவா அல்லது நியாயமான, ஓப்புரவான அனைவரையும் உள்ளடக்கும் ஒன்றாக நோக்கப்படுகின்றனவா என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் தாம் அறிந்தவற்றை ஏன் அறிந்துவைத்துள்ளனர் என்பது குறித்து தெளிவான சுட்டிகளை வழங்குவர். காரண காரியம் குறித்த சான்றுகளை அவர்கள் எடுத்துக்காட்டுவர். அவர்கள் தாக்கங்கள் குறித்த அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளனர்.

இந்த அபிப்பிராயங்கள் உதவி முகவர் நிலையங்களுக்குக் காரணம் கற்பித்தல் குறித்த ஒரு மிகச்சிறந்த மூலத்தை வழங்குகின்றன. ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் தாக்கங்கள்குறித்து மக்கள் என்ன சொல்கின்றனர் என்பதை அறிந்துவைத்திருப்பது உண்மையான தாக்கங்களை அளவீடுசெய்யும் ஒரு முக்கியமான வழியாகும். மேலும், மக்கள் அபிப்பிராய மாற்றமொன்றை அறிக்கையிட்டால், இந்த மாற்றம் மாற்றமுற்ற நடத்தையில் அவதானிக்கக்கூடிய ஒன்றாக விளங்கினால் சான்று மேலும் சிறந்த ஒன்றாகும்.

## 5. சமாதான செய்முறை தாக்க மதிப்பீட்டுடன் RPP அனுபவம்



சமாதான செயற்பாட்டாளர்கள் பெரும்பாலும் கண்டுணரமுடியாத விடயங்கள் குறித்தே பணியாற்றுகின்றனர். அவர்கள் மனப்பாங்குகள், நம்பிக்கைகள், விசுவாசம், பாதுகாப்பு சம்பந்தமான புலன் கருத்துணர்வுகள் மற்றும் குழுக்களுக்கிடையிலான பதற்றங்கள் அல்லது வளர்ந்து செல்லும் சமாதானத்துக்குப் பங்களிப்புச் செய்யும் ஏனைய காரணிகள் என்பவற்றின்மீது கவனம் செலுத்துகின்றனர். பல சமாதான செயற்பாட்டாளர்கள் தமது பணியின் பயனுறுதியைக் கணிப்பீடு செய்வதற்கான அளவுகோல்களை இனங்காணுவதற்கான முயற்சிகள் குறித்து அவ்வளவாக நம்பிக்கை தெரிவிக்கவில்லை என்பதை RPP கண்டறிந்தது.

RPP கலந்துரையாடல்களில் பயனுறுதியை கணிப்பீடு செய்வதற்கு எதிராக நான்கு அடிப்படையான வாதங்கள் எழுந்தன. முதலாவதாக, சிலர் சமாதானத்தை "ஈட்டுவதற்கு நீண்ட காலம் எடுக்குமென்றும்" ஆகவே குறிப்பிட்ட சமாதான முயற்சிகளின் விளைவுகளை அறிந்து கொள்ள முயல்வது "காலத்துக்கு முந்தியதென்றும்" தெரிவித்தனர். இரண்டாவதாக, சிலர் சமாதானம் சிக்கலானது என்பதால் எந்தச் செயற்பாடுகள் முன்னேற்றத்துக்கு எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றன என்பதை அறிந்துகொள்வது சாத்தியமில்லையென்று தெரிவித்தனர். மூன்றாவதாக, பலர் சமாதானத்தை நோக்கிய முன்னேற்றம் குறித்த கண்டுணரப்படமுடியாத ஒரு விடயத்தை கணிப்பீடு செய்வது சாத்தியமில்லையென்று கூறுகின்றனர். நான்காவதாக, சிலர் "பயனுறுதி மிக்கதாய் இருப்பதை விட" "விசுவாசமாக இருக்கவேண்டும்" என்றும், "சரியானதைச் செய்ய வேண்டும் என்றும்" எண்ணுகிள்றனர். பல சமாதான செயற்பாட்டாளர்கள் சில குறிப்பிட்ட நியமங்களின் பிரகாரம் வாழுதல் மற்றும் செயற்படுத்துதல் என்பன சம்பந்தமான தமது தார்மீக அர்ப்பணிப்புணர்வினால் உந்தப்படுகின்றனர். சாதனைகள் மற்றும் வெற்றிகள் குறித்து அவர்கள் அதிகம் கவலைப்படுவதில்லை. அதே வேளையில் RPP இல் சம்பந்தமுற்ற பாரிய பெரும்பான்மையினரான மக்கள் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் சம்பந்தமான தைரியமும், தியாகமும்

கொண்ட முயற்சிகளிலிருந்து மிகவும் மட்டுப்பட்ட விளைவுகளைக் காண்பதால் ஆழமான திருப்தியின்மையையும் அமைதியின்மையையும் அவதானித்தனர். அநேகமானோர் விளைவுகளை மேம்படுத்தவும், தாம் விரும்பிய மாற்றங்களைத் தாம் ஈட்டிக்கொள்வது மற்றும் ஈட்டிக்கொள்ளாமல்விடுவது எப்பொழுதென்று அறிந்து கொள்ளவும் விரும்பினர்.

சமாதானத்தின் முன்னேற்றம் குறித்த சுட்டிகளை சகல சூழமைவுகளுக்கும் பொதுவாக வகுத்தமைப்பது சாத்தியமில்லை என்பது விரைவில் தெளிவாகியது. உதாரணமாக, எவருமே இதுவரையில் மோதுகையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு வெளிப்படையான எந்த நடவடிக்கையையும் எடுக்காத ஒரு பிரதேசத்தில் இருவர் எடுக்கும் ஒரு பகிரங்க முன்முயற்சி ஒரு பாரிய முன்னோக்கிய படியாக அமையக்கூடும். ஆயினும், நூற்றுக்கணக்கான மக்கள் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை வழமையாக நடத்தும் ஒரு பிரதேசத்தில் அத்தகைய மேலுமொரு சம்பவம் எத்தகைய முன்னேற்றத்தையும் காட்டாத ஒன்றாக இருக்கக்கூடும். இவ்வாறாக வெளிப்படையான யுத்த எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மக்களின் எண்ணிக்கைகளைக் கணக்கிலெடுக்கும் ஒரு சுட்டியைத்தாபிப்பது இச்சூழ்நிலைகள் ஒவ்வொன்றினதும் யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாக அமையமாட்டாது. உண்மையான தாக்கங்களை கணிப்பீடு செய்வதெனில், சூழமைவையும், என்ன செய்வதென்பதையும் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

ஆயினும், பரந்த RPP கலந்தாலோசனைகளினூடாக சமாதான நடைமுறையின் இரு நீண்டகால இலட்சிய ங்களுக்குப் (வன்செயலை முடிவுறுத்தி, நீதியான நிலைபேறான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்) பங்களிப்பு செய்யும் பல்வேறு நடவடிக்கைகளை கணிப்பீடுசெய்வதைப் பொதுமைப்படுத்துவதற்கான அளவுகோல்களை (உள்ர் மயப்பட்ட காட்டிகள் அல்ல) இனம்காணுவது சாத்தியமாகியது. தாக்க கணிப்பீட்டுக்கான அனைத்து வியாபக பயன்கொண்டதென்று இனம் காணப்பட்ட பயனுறுதிகுறித்த அளவுகோல்கள் நான்கு உள்ளன.



**பயனுறுதி குறித்த அளவுகோல்கள்**

RPP இனூடாக தேடப்பட்ட சான்றுகள் பின்வரும் விடயங்களாக இருப்பின் சமாதான நடைமுறை முயற்சி பயனுறுதி மிக்கதாக அமையும் என்பதையும் கண்டறிந்தது. (சமாதானத்தன் நீண்டகால இலட்சியங்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவது-"பெரிதாக எழுதப்பட்டுள்ள சமாதானம்":

* பங்கேற்போர் தாமாகவே சமாதானப்பணி குறித்த முன்முயற்சிகளை எடுப்பதற்குத் தூண்டுகின்றது.
* மோதுகைக்குக் காரணமான மனக்குறைகளுக்குத் தீர்வுகாணும் நிறுவனங்களைச் சீர்திருத்தம் செய்வதற்கு அல்லது கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்பு வழங்குன்றது.
* மக்கள் மேலும் அதிகரித்த வகையில் வன்செயலை அல்லது வன்செயலுக்கான சாதூரிய நடவடிக்கைகளை எதிர்த்து நிற்க உதவுகின்றது. அது மக்களின் பாதுகாப்பையும், அவர்களின் பாதுகாப்புக் குறித்த புலன் கருத்துணர்வையும் அதிகரிக்கின்றது.

இந்த நான்கையும் சாதிக்கும் முயற்சியொன்று இந்த அளவுகோல்களுள் ஒன்றுக்கு மாத்திரம் பங்களிப்புச் செய்யும் ஒரு முயற்சியைவிட மேலும் பயனுறுயுள்ளதென்பதை அனுபவம் காட்டுகிறது. இச்செய்திட்டம் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களோடு தொடர்புநிலையிலான பயனுறுதியை கணிப்பீடு செய்வதாயின் அந்த சமாதான நடைமுறைகுறித்தும் மூன்று மேலதிக வினாக்கள் எழுப்பப்படவேண்டுமென்பதையும் கண்டறிந்தது.

* அது வேகமான ஒன்றா? அதாவது நாம் எடுக்கும் அணுகுமுறை உண்மையான காலத்தில் ஓர் ஆக்கபூர்வமான வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றதா அல்லது மேலும் துரிதமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வேறு அணுகுமுறை உள்ளதா?
* அது பெரிதான ஒன்றா? அதாவது எமது அணுகுமுறை மோதுகையின் அளவோடு தொடர்புற்றதா அல்லது அதிகரித்த தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஏனைய விருப்புத் தெரிவுகள் இருக்கும்போது நாம் ஒரு சிறிய ஓரைநிலைச் செயற்பாட்டுடன் திருப்திகண்டுள்ளோமா?

* அது நிலைபேறான ஒன்றாக இருக்குமா? அதாவது எமது பயனுறுதி தற்காலிகமானதா அல்லது அனைத்துக்கு மேலாக நிலையான, பேண்தகு தாக்கமொன்றை ஏற்படுத்தக்கூடிய ஓர் உத்தியை நாம் தெரிவுசெய்துள்ளோமா?

பயனுறுதிகுறித்த அளவுகோல்கள் நான்கு சகல சூழமைவுகளிலும் பிரயோகிக்கப்படக்கூடிவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் மோதுகையிலிருந்து விலகி, சமாதானத்தை நோக்கி செல்லும் உத்வேகத்தை அதிகரிக்கும் ஒரு காரணியை பிரதிநிதித்துவம் செய்கின்றது. மூன்று மேலதிக வினாக்கள் விருப்புத்தெரிவுகள் மற்றும் அணுகுமுறைகளை ஒப்பிடக்கூடிய மேலுமொரு அடிப்படை நியமத்தைத் தாபிக்கின்றன. இந்த அளவுகோல்களையும், வினாக்களையும் பயன்படுத்தி சமாதான நடைமுறை முகவர் நிலையங்கள் தாம் பணியாற்றும் சூழமைவைப் பகுப்பாய்வு செய்தபின் சமாதானத்தில் பாரிய இலட்சியங்கள் தொடர்பிலான பயனுறுதியில் அதி உயர்வான சாத்தியத்தை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமிடல் அணுகுமுறைகளை தெரிவு செய்யலாம். மேலும் நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் அதன் பின்னரும் அளவுகோல் வகைப்பிரிவுகளால் இனம் காணப்பட்ட நான்கு வகைப் பிரிவுகளில் தமது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முடிவுகள் மேற்கொள்ளப்படலாம்.

## 6. LCPP - RPP பொதுமைகளும் வேறுபாடுகளும்

RPP மற்றும் LCPP இரண்டுமே இச்செய்திட்டங்கள் சம்பந்தமான துறைகளில் குறிப்பாகப் பணியாற்றும் பலரை ஈடுபடுத்தும் வகையில் உருவாக்கப்பட்டவையாகும். அவை அனுமானம்சார் கற்றலைவிட, உய்த்துணர்வு சார் கற்றலுக்காக ஓழுங்கு செய்யப்பட்டவையாகும். அவை பரந்த அனுபவங்களைத் திரட்டுதல், தேடல் முடிவுகளின் பகுப்பாய்வு மற்றும் ஓப்பீடு மற்றும் பொதுவான கருப்பொருட்கள், பிரச்சினைகள், பாடிப்பனைகள் மற்றும் பாங்குகள் என்பவற்றைத் தேடும் வகையில் ஆரம்பிக்கப்பட்டவையாகும். அவை இரண்டிலுமே சிந்தனையாளர்களும் செயற்பாட்டாளர்களும் தாம் பிரித்தெடுக்கும் பாடங்களைப் பரிசீலித்தல், மீள்பரிசீலித்தலில் ஈடுபடுத்தலுக்கு உள்ளமைவான மீளூட்டல் செயல்முறைகளைக் கொண்டிருந்தன.



ஆயினும், இரு செய்திட்டங்களுக்கும் இடையில் ஒரு பிரதான வேறுபாடு இருந்தது. LCPP சர்வதேச உதவியின் பக்கவிளைவுகள் குறித்துக் கற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துகையில் (அதாவது இத்தகைய உதவி துன்பங்களைப்போக்கி, அபிவிருத்தியை முன்னேற்றியபோதிலும் எவ்வாறு மோதுகைளை ஊக்குவிக்கின்றதென்பது), RPP மோதுகை குறித்து பணியாற்றும் முகவர் நிலையங்கள் எவ்வாறு தமது பிரதான நோக்கத்தை (மோதுகையைக் குறைத்து சமாதானத்தை முன்னேற்றுதல்) ஈட்டிக் கொள்கின்றன அல்லது ஈட்டிக்கொள்ளத்தவறுகின்றன என்பதைக் கற்றுக்கொள்வதில் கவனத்தைச் செலுத்தியது. இந்த முக்கிய வேறுபாடு இருந்தபோதிலும், தாக்கங்களை கணிப்பீடு செய்வது தொடர்பான பல தேடல் முடிவுகள் இரு செய்திட்டங்களுக்கும் பொதுவானவையாக இருந்தன. இவற்றுள் ஐந்து பின்வருமாறு :

### 1.தாக்கங்கள் மறைபொருள் கருத்தியலானவை அல்ல

தாக்கங்கள் அவதானிக்கக் கூடியவையாகும். பொதுமைப்படுத்தக்கூடிய தாக்கச்சுட்டிகளை உருவாக்கும் முயற்சிகளில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளுள் ஒன்று தூரம்குறித்த பிரச்சினையாகும். LCPP மற்றும் RPP அனுபவங்கள் இரண்டுமே அநேகமான சந்தர்ப்பங்களில் களத்தில் ஏதாவது நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கையின் உடனடித்தாக்கத்தை ஐயத்துக்கிடமின்றி அறிந்துகொள்வது இலகுவானதென்பதைக் காட்டியுள்ளன. உதாரணமாக, ஆண் தொழில்நுட்பவியலாளர்கள் படையினுள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்பதையும், பெண் தொழில்நுட்பவியலாளர்கள் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்பதையும் அனைவரும் அறிந்திருந்தனர். ஒரு பிரச்சினையைக் குறித்துரைப்பாக இனங்காணுவது தீர்வைக் குறித்துரைப்பாக இனங்காணுவதற்கு உதவியாகவுள்ளது. பிரிவுநிலைக் காரணிகள் / இணைப்புக் காரணிகள் குறித்த பகுப்பாய்வு LCPP ற்கு இக்குறித்துரைப்பான

தன்மையை வழங்கியது. குழுக்களுக்கிடையிலான உறவுகள்குறித்த இந்த அம்சங்களில் சமாதானத்திலும், மோதுகையிலுமான நிகழ்ச்சித்திட்டத்தாக்கங்களை அவதானிக்கலாமென்பதே இதற்கான காரணமாகும். RPP ஐப் பொறுத்தவரையில், உதாரணமாக ஏதாவது நடவடிக்கையில் பங்கேற்போர் செய்திட்டத் திட்டவியலாளர்களுக்கு அப்பாற்பட்டவிதத்தில் தமது சொந்த முன்முயற்சிகளை மேற்கொண்டபோது (பயனுறுதி அளவுகோல் 1) அல்லது, குறித்துரைத்த சூழ்நிலைகளின் கீழ் ஜனசமூகங்கள் வன்செயல் வரலாறு ஒன்றையும் கொண்டிருந்தபோதிலும், அவை மீண்டும் அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொண்ட போதிலும், அவை மோதுகையில் ஈடுபடாதபோது (பயனுறுதி அளவுகோல் 3) இது தெளிவாகியது. உதாரணமாக, வரலாற்றுரீதியாக, கென்யாவில் தேர்தல்கள் நடைபெறுங்காலங்களில் பல ஜனசமூகங்கள் (சிலவேளைகளில் பாரதூரமான) குழுக்களிடையிலான வன்செயலை அனுபவிப்பதாக கென்யாவின் சமாதான செயற்பாட்டாளர்கள் அறிக்கையிடுகின்றனர். ஆயினும், சமாதான முகவர் நிலையங்களின் ஒன்றுபட்ட பணிகாரணமாக 2003 தேர்தலில் பல் ஜனசமூகங்கள் சகல வன்செயல் மோதுகைகளையும் தவிர்த்துக்கொண்டதோடு, தமது சொந்த நலன்களில் பாதிப்பையும், ஏனையோரின் நலன்களுக்குச் சேவைசெய்பவையுமான தமது கடந்தகாலச் செயற்பாடுகள் சுயநலம் காரணமாகத் தம்மைத் தூண்டிவிடுவோரால் ஏற்பட்டவை என்பதையும் அறிந்துகொண்டனர்.

2. எண்ணிக்கைகள் முக்கியமானவை

LCPP மற்றும் RPP இரண்டிலுமே பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறுபட்டோரின் அனுபவங்களைப் பிரதிநிதித்துப்படுத்தும் பாங்குகள் சேர்ந்துபெருகுதல் மோதுகை மீதான நிகழ்ச்சித்திட்டத் தாக்கங்கள் குறித்த நம்பிக்கையூட்டும் சான்றுகளை வழங்கியது. ஒரு குறிப்பிட்ட விளைவை மீண்டும், மீண்டும் அவதானிக்க முடியுமெனில் மீள்பார்வை செய்யப்படும் சூழ்நிலைகளுக்கு நெருக்கமாகவுள்ள பல செயற்பாட்டாளர்கள் காரணங்குறித்த அர்த்தப்படுத்தலோடு இனங்கினால், உதாரணங்களின் அதிகரித்த எண்ணிக்கையும், உடன்பாட்டின் பரவலான தன்மையும் தேடல் முடிவுகளின் நம்பகத்தன்மைக்கு ஆதரவாக அமையும்.



3. இலட்சியங்களைச் சிறு படிகளாக்குவது உதவிகரமானது

ஒரு நிகழ்ச்சித்திட்டம் எவ்வாறு ஒரு தீங்கான விளைவை இல்லாமற் செய்கின்ற தென்பதை கணிப்பீடு செய்வது, ஒரு மோதுகைமீது ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆக்கபூர்வமான ஒரு விளைவை எவ்வாறு முன்னேற்றுகின்றதென்பதை கணிப்பிடுவதைவிட இலகுவானதென்பது LCPP யினூடாகத் தெளிவாகியது. இவ்வாறே,RPP யில் மீளிணக்கம் மற்றும் சமாதானம் என்னும் இறுதி இலட்சியத்தை நோக்கிய முன்னேற்றத்தை கணிப்பீடு செய்வதைவிட, வன்செயல் குறைப்பைத் தேடியறிவது இலகுவானதாகும். இலட்சியம் அருகமைவானதாகவும், குறித்துரைப்பானதாகவும் இருக்கும்போது அதை அடைவதிலான பயனுறுதியை அறிந்து கொள்வதும் மேலும் இலகுவானதாகும். (சமாதானம் போன்ற ) பெரிய இலட்சியங்களை வழிமுழுவதும் சிறு தெளிவான படிகளாக்குவது முன்னேற்றத்தை கணிப்பீடு செய்யும் ஒரு பயனுள்ள வழியை வழங்குகின்றது. (ஆயினும் சிறிய, வரைவுள்ள இலக்குகளைத் தீர்மானிப்பது மேலும் குறிப்பிடத்தக்க பயனுறுதிக்கான வகைப்பொறுப்பைத் தவிர்க்கும் ஒரு வழியாகவும் அமைந்து விடக்கூடும். கீழே நாம் மீண்டும் இவ்விடயத்துக்கு வரவுள்ளோம்.)

4. மக்கள் அறிவார்கள்

நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் சூழலிலுள்ள மக்கள் தாக்கங்கள் மற்றும் காரண விளைவுகள் குறித்து அபிப்பிராயங்களை (பல சந்தர்ப்பங்களில் செல்லுபடியான அபிப்பிராயங்களை) கொண்டிருப்பர். அவர்கள் குறிப்பிட்ட நிகழ்வுகளின் பலனாகச் சிலவிளைவுகள் ஏற்படுவதாகக் கூறுகின்றனர். அவர்கள் தாக்கங்கள் குறித்ததும், தாக்கங்களை உறுதி செய்வதுமான ஒரு தீர்மானகரமான தகவல்மூலத்தை வழங்குகின்றனர்.

**5. தாக்கங்கள் அசைவியக்கம் கொண்டதுடன் அவற்றைச் சுற்றியுள்ள நிகழ்வுகளை மாற்றும் தன்மைகளைக் கொண்டவையாகும்**

மோதுகைச் சூழமைவுகளில் விடயங்கள் துரிதமாகவும், தொடர்ச்சியாகவும் மாற்றமுறுவதால் இச் சூழமைவுகள் மீதான நிகழ்ச்சித் திட்டத் தாக்கங்களைத் தேடியறியும் முயற்சிகள் அவை இயக்கத்தன்மை கொண்டவையென்பதையும் ஏற்றுக்கொள்ளுதல்வேண்டும். பிரத்தியேகமாக, தாக்கங்கள் மாற்றமுறுகின்றனவா (மற்றும் அவை எவ்வாறு மாற்றமுறுகின்றன) என்பதை அறிந்துகொள்வதற்கு அவற்றை நீண்டகாலவோட்டத்தில் கண்காணிப்புச் செய்வது முக்கியமானதாகும். (உதாரணமாக, LCPP ஐப் பொறுத்தவரையில் பெண்களைத் தொழில்நுட்பவியலாளர்களாகப் பயிற்றுவிக்கும் தீர்மானம் காரணமாகப் பெண்களையும் படையில் சேர்க்கும் விதத்தில் கட்டாய ஆட்சேர்ப்புக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக் கூடும்).

தாக்கங்களைக் கணிப்பீடு செய்யும் படிப்பினைகள் LCPP யினூடாகப் பெற்ற படிப்பினைனளை விட இருவகைகளில் வேறுபட்டவையாகும். LCPP ஐப் பொறுத்தவரையில் மோதுகைகள் மீதான மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளின் தாக்கங்களைத் தேடியறிவதற்கு பிரிவினை மற்றும் இணைப்புக் காரணிகள் குறித்த சூழமைவுப் பகுப்பாய்வு போதுமானதாகத் தோன்றுகையில், மோதுகையின் வரலாறு, அசைவியக்கம் மற்றும் இடைத்தாக்கங்களை விளங்கிக் கொள்வதும், பகுப்பாய்வுசெய்வதும் மேலும் அனைத்துமடங்கும் வகையில் இடம்பெறும்போது, ஒரு முகவர் மேலும் பயனுறுதியுள்ளவராக விளங்குவதும் சாத்தியமாகும். மேலே தரப்பட்ட RPP தேடல் முடிவுகளின் குறிப்பிடப்பட்ட சூழமைவுப் பகுப்பாய்வின் நான்கு குறிப்பிடத்தக்க அம்சங்கள் பயனுறுதியை மதிப்பீடு செய்வதற்கு மிகவும் அவசியமானவையென்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. இவற்றுக்கும் அப்பால் பயனுறுதியுள்ள பணியில் ஈடுபட விரும்பும் சமாதானப் பணியாளர்கள் மேலும் அதிகமான விடயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பதும் முக்கியமானதாகும். சமாதானச் செயற்பாட்டாளர்கள் சமாதானத்தை ஈட்டிக் கொள்ளும் விடயத்தில் நேரடியானதும், நிலையானதுமான தாக்கங்களை ஏற்படுத்தும் நோக்கங்களைக் கொண்டிருப்பதால் அவர்கள் தாம் பணியாற்றும் சமூகத்தில் ஆழமான பரந்த செயற்பாடுகளைக் கொண்டிருத்தல்வேண்டும். ஆயினும் RPP அனுபவங்களின் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் அறிந்து வைத்திருக்கவேண்டிய குறித்துரைப்பான விடயங்கள் ஓவ்வொரு பிரதேசம் குறித்தும் வேறுபடும். RPP அனுபவத்தின் பிரகாரம் இவற்றைப் பொதுமைப்படுத்துதல் சாத்தியமில்லை.



RPP தேடல் முடிவுகளைப் பொறுத்தவரையில் இரண்டாவது முக்கியமான வேறுபாடு, மேற்கொள்ளப்படும் பணிகளை பல்வேறு உத்திகளுடனும், பல்வேறு மட்டங்களிலும் இணைத்தலாகும். (உரு 1 இன் வார்ப்புருவில் நான்கு கால்வட்டங்கள் காண்பிப்பது போன்று) LCPP ஐப் பொறுத்தவரையில் பிரிக்கும் காரணிகளையும், இணைக்கும் காரணிகளையும் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் உதவி சம்பந்தமான அவற்றின் அணுகுமுறைகளைக் கூட்டிணைப்புச்செய்தல் போன்ற விடயங்களில் பல்வகை உதவி முகவர் நிலையங்களின் கூட்டுப்பணி, ஓட்டுமொத்தமாக, உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் பிரிவுகளை ஊக்குவிக்காமல், இணைப்புகளுக்கு ஆதரவு வழங்குவதை உறுதிப்படுத்துவதில் முக்கியத்துவம் கொண்டதாகும். ஆயினும், தனிநபர் பணியைச் சமூக-அரசியல் நடவடிக்கைகளுடன் இணைப்பதும், கூடுதலான ஆட்கள் குறித்த உத்தியை முக்கியமான ஆட்கள் குறித்த உத்திகளுடன் இணைப்பதும் பயனுறுதியைப் பொறுத்தவரையில் மையமானதும், அவசியமானதுமென்பதை RPP கண்டறிந்தது.

ஒரு தனிப்பட்ட உதவி முகவர் நிலையம் தீங்கு செய்வதைத் தவிர்த்துக் கொண்டு, உள்;ர் இயலுமைகளுக்கு ஆதரவுவழங்கமுடியும். ஆயினும், ஏனைய கால்வட்டங்களிலான பணிகளுடன் இணைப்புப் பெறாத வகையிலான சமாதான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் ஒரு முகவர்நிலையம் சமாதானப் பணியில் சரியான இலக்கை அடையமுடியாது. பயனுறுதியை ஈட்டிக்கொள்ளவிரும்பும் சமாதான முகவர்நிலையங்களுக்கு தனிப்பட்டுப் பணியாற்றும் விருப்புத்தெரிவு கிடையாது.

## 7. இறுதிக் கருத்துரைகள்

விளைவுகளைத் தேடியறிதல், மதிப்பீடுசெய்தல் சம்பந்தமாக LCPP, RPP செய்திட்டங்களினூடாக கற்றுக் கொண்ட பாடங்கள் தாக்கத்தை கணிப்பீடுசெய்வதில், மர்மங்களைத் துலக்குவதில் சிறிதளவு வெற்றிகண்டுள்ளது. வெளிக்களத்தில் குறித்துரைத்த இலக்குகளை மனதில் கொண்டும் உள்ர் மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் நடத்தைகளுக்குக் கவனம் செலுத்தியும் பணியாற்றுவதன்மூலம் ஒரு நிகழ்ச்சிதிட்ட முயற்சியின் விளைவாக என்ன நடந்துள்ளதென்பதை அறிந்துகொள்வதும், மோதுகையின் உடனடி வெளிப்பாடுகள் மீதும் இப்பணியின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதும் சாத்தியமாகும். இரு செய்திட்டங்களுமே ஒரு முயற்சியின் இலக்குகள் மேலும் உன்னதமானவையும், நெடுந்தூரம் செல்பவையும் ஆகும்போது தாக்கங்களைத் தேடியறிவதிலும், அவற்றை மதிப்பீடு செய்வதிலுமான இடர்கள் அதிகரிக்கும் என்பதையும் காட்டி நிற்கின்றன.

ஒரு பாரிய இலட்சியத்தை சிறு பகுதிகளாக்கி உடனடி மற்றும் குறித்துரைத்த படிகளாக்குவது தாக்கங்களைத் தேடியறிவதில் உதவுகின்றது என்பதை நாம் முன்னரே அவதானித்தோம். ஆயினும் RPP செய்திட்டத்தில் இவ்வாறு சிறு பகுதிகளாக்குவதன் அபாயமொன்று தென்பட்டது. அதை இங்கு குறிப்பிடுவது நன்று. சமாதானம் பாரியதும், கண்டுணர முடியாததும், சிக்கலானதுமாக விளங்குவதால் சில சமாதான செயற்பாட்டாளர்கள் “நல்ல உணர்வுடன் எதையுமே செய்யாதிருத்தல்“ நிகழ்ச்சித் திட்டமிடல் நோக்கிய ஒரு போக்கை இனம் கண்டனர். இத்தகைய சிக்கல்கள் மத்தியில் சிறு சிறு படிகளில் வெறுமனே நிகழ்ச்சித் திட்டமிடல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், சமாதானத்தை முன்னேற்றுவதற்கும் அவசியமானவற்றை வழங்குவதில் வெற்றிகாணாது விடலாம். சமாதான செயற்பாட்டாளர்கள் சிறு முன்னேற்றங்கள் குறித்து திருப்திகொள்ளவோ தொடர்ச்சியான துயரங்கள் குறித்து பொறுமையாக இருக்கவோ முடியாது. பயனுறுதியை அதிகரித்துக் கொள்வதற்கும், மேலும் பரந்த தாக்கங்களை ஏற்படுத்துவதற்குமான அவசரத்தேவையுள்ளது.



உதவி வழங்கும் பணியாளர்கள் தமது நிகழ்ச்சித் திட்டங்களில் வெறுமனே தீங்கு செய்யாதிருப்பதைவிட மேலும் அதிகமாக செய்யமுடியுமென்றும் அவ்வாறு செய்யவேண்டுமென்றும் மேலும் அதிகமாக உணரத்தலைப்படுகின்றனர்.

உதவி வழங்கும் பணியாளர்களும், சமாதான செயற்பாட்டாளர்களும் பல வருடகாலமாக தாம் ஈடுபட்டுவரும் பரந்த பணியினூடாக பெற்ற அறிவைப்பயன்படுத்தி, தமது பயனுறுதியை அதிகரித்து, வன்செயலின்றி கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் நீதியான சமூகங்களை நிலைநாட்டுவதற்கு குறிப்பிடத்தக்க வகையிலும் நிலையாகவும் பங்களிப்புச் செய்யமுடியும் என்று தமது அனுபவத்தினூடாகக் கண்டுள்ளமையால், அவர்கள் தமது பணியின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாக தாக்க கணிப்பீட்டைத் தீவிரமாகக் கையாளுதல் வேண்டும்.

உலகில் உள்ள சகல தொழில்சார் நிபுணர்கள் மத்தியிலும் உதவி வழங்கி சமாதானத்தை முன்னேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோர் தமது பணியை ஒரு வேலை மாத்திரமென்று கருதாமல் அர்ப்பணிப்புணர்வுடன் பணியாற்ற வேண்டும்.

## 8. மேலதிக வாசிப்பு


Anderson, Mary B. 1999. *Do No Harm: How Aid Can Support Peace - or War,* London: Lynne Reinner Publishers.Inc.

Anderson, Mary B. and Lara Olson (with assistance from Kristin Doughty) 2003. *Confronting War: Critical Lessons for Peace Practitioners,* Cambridge, Mass: Collaborative for Development Action, Inc.